நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 21.02.2026 . மலர் 04 . இதழ் 51. சனிக்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 21.02.2026 . VOL 04 . ISSUE 51. SATURDAY . 4 PAGES . Rs.5

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர

## தமிழ்நாட்டு மக்களுக்காக இன்னும் உழைக்க காத்திருக்கிறேன்

# மீண்டும் வருவோம் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டவட்டம் !!

சென்னை, பிப்.21-

சட்டப்பேரவையின் நிறைவு நாள் கூட்டத்தில் பேசிய முதல்வர் ஸ்டாலின், ''மீண்டும் வந்து ஆட்சி அமைப்போம். தமிழக மக்களுக்கான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவோம்'' என்று நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் 2026-27 பட்ஜெட் கூட்டத் தொடர் நேற்று நிறைவடைந்தது. இது நடப்பு 16-வது சட்டப்பேரவையின் கடைசி நாள் கூட்டம் ஆகும். இதில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: கடந்த 5 ஆண்டு காலத்தில் 5 பட்ஜெட்கள் அளிக்கப்பட்டுள்ளன. அமைச்சர்கள் எம்ஆர்கே. பன்னீர் செல்வம், தங்கம் தென்னரசு ஆகியோர் சிறப்பான பட்ஜெட், பதிலுரை வழங்கியுள்ளனர்.

இதன் தொடர்ச்சியை, அடுத்த 2 மாதத்தில் மீண்டும் வந்து, நிச்சயம், இன்னும் கூடுதலாக, வேகமாக தொடர்வோம். 5 ஆண்டு அனுபவத்தால் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இன்னும் வலிமை பெற்றுள்ளேன். தமிழகத்தை இன்னும் ஏற்றம் பெற வைக்க நம்பிக்கையோடு உழைக்க வேண்டும் எனும் ஊக்கம், வல்லமையும் பெற்றுள்ளேன்.

தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளையும் எனது தொகுதியாகவே நினைத்து, எங்களுக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் என்று பிரித்துப் பார்க்காமல் செயலாற்றி உள்ளேன். இந்த மிகப் பெரிய வாய்ப்பைத் தந்த தமிழக மக்கள், என்னைத் தேர்ந்தெடுத்து பேரவைக்கு அனுப்பிய கொளத்தூர் தொகுதி மக்களுக்கு மனமார்ந்த நன்றி.

கடந்த 2021-ல் பேரவை நூற்றாண்டு விழாவுக்கு வந்து, முன்னாள் முதல்வர் கருணாநிதியின் படத்தை திறந்து வைத்த அன்றைய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துக்கு நன்றி. ஆளுநருக்கும், எனக்கும் தனிப்பட்ட முறையில் எந்த வித கருத்து வேறுபாடும் கிடையாது. தமிழர்களின் சுயமரியாதை எள்முனையளவு சீண்டப்பட்டாலும், அது யாராக இருந்தாலும், எதிர்க்குரல் கொடுக்கும் திசையில் முதல் நபராக இருப்பேன். தமிழர் பண்பாட்டை மனதில் கொண்டு, ஆளுநருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 5 ஆண்டுகளாக அமைதி, கண்ணியம், கட்டுப்பாட்டோடு பேரவையை சிறப்பாக நடத்திய பேரவைத்தலைவருக்கு பாராட்டுகள், வாழ்த்துகள். பேரவையில் அனல் பறக்கும் விவாதம் நடைபெறும் சூழலில் தனது அனுபவத்தாலும், அபார நினைவாற்றலாலும் அமைதிப்படுத்தக் கூடிய அவை முன்னவர் துரைமுருகன் விரைந்து உடல் நலம் பெற்று வரவேண்டும். அவருக்கும் எனது நன்றிகள்.

மக்கள் பணியிலும், தேர்தல் பணியிலும் என்னில் ஒரு பாதியாய், இயக்கத்தின் வளர்ச்சிக்கும், ஆட்சியின் சிறப்புக்கும் உறுதுணையாக நிற்கும் துணை முதல்வருக்கும் பாராட்டுகள், நன்றிகள். அரசின் திட்டங்கள் சிந்தாமல் சிதறாமல் மக்களிடம் சென்றடைய முழு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அமைச்சர்கள், தலைமைச் செயலர், அனைத்து துறைகளின் செயலர்கள், காவல் துறையினர் அனைவருக்கும் நன்றி.

குறைகளைச் சொல்பவர்கள் நம் முன்னேற்றத்துக்கு சிறகுகளைத் தருபவர்கள். அந்த வகையில், அரசுக்கு தக்க யோசனைகள் கூறுவதிலும், குறைகளைச் சுட்டிக்காட்டுவதிலும், கண்ணியமான முறையை கடைபிடித்து, ஒத்துழைப்பு நல்கிய எதிர்க்கட்சித் தலைவருக்கும், இதர கட்சித் தலைவர்களுக்கும், எங்கள் சாதனைகளுக்கெல்லாம் தோளோடு தோள் நின்ற தோழமைக் கட்சித் தலைவர்களுக்கும் நன்றி.

இந்த 5 ஆண்டுகளில் எனக்கும், என் மனசாட்சிக்கும் மட்டுமே கட்டுப்பட்டு உழைத்துள்ளேன். இன்னும் உழைக்கக் காத்திருக்கிறேன். நாளை நாங்கள் அமைக்கும் திராவிட மாடல் 2.0 ஆட்சி, எங்கள் சாதனைகளை நாங்களே விஞ்சும் அளவுக்கு இருக்கும். மீண்டும் வந்து ஆட்சி அமைப்போம். தமிழக மக்களுக்கான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவோம். இவ்வாறு முதல்வர் பேசினார்.

## மீண்டும் திமுக ஆட்சி ஓ.பன்னீர்செல்வம் கணிப்பு

சென்னை, பிப்.21-

"மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடிய வாய்ப்பு திமுகவுக்கு இருக்கிறது" என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகத்தின் தலைவர் ஓ.பன்னீர்செல்வம் தமிழக சட்டப்பேரவை வளாகத்தில் முதல்வர் ஸ்டாலினை சந்தித்துப் பேசியது அரசியல் வட்டாரத்தில் பல்வேறு சந்தேகங்களை கிளப்பியுள்ளது.

இந்தச் சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களிடம் ஓ.பன்னீர்செல்வம் கூறும்போது, "ஐந்தாண்டு கால திமுக ஆட்சி சிறப்பாக நிறைவு பெற்றிருக்கிறது. அதனால் முதல்வரை சந்தித்து வாழ்த்து தெரிவித்தேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

அப்போது உசிலம்பட்டி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ஐயப்பன், முதல்வர் ஸ்டாலினுக்கு ஆதரவாக சட்டப்பேரவையில் பேசியது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர், "தமிழக மக்கள் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறார்களோ, அதை அவர் சொல்லியிருக்கிறார்" என்று கூறினார்.

பின்னர் அவர், "அது பொதுவான கருத்து, இன்றைக்கு இருக்கும் அரசியல் சூழ்நிலை, கடந்த 5 ஆண்டு கால ஆட்சியின் நிலை, திமுக செய்த சாதனைகள் மக்கள் மனதில் ஆழமாக பதிந்திருக்கிறது. மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடிய வாய்ப்பு திமுகவுக்கு இருக்கிறது. தமிழகத்துக்கே வழி பிறந்திருக்கிறது" என்றும் ஓபிஎஸ் கூறினார்.

# ரூ.70 ஆயிரம் கோடி வரி ஏய்ப்பு !

## சிக்கிய ஐதராபாத் பிரியாணி ஓட்டல்கள் !!



ஹைதராபாத், பிப்.21-

செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பத்தின் உதவியால் பிரியாணி ஓட்டல்களில் ரூ.70,000 கோடி வருவாயை மறைத்து வரிஏய்ப்பு மோசடி நடந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வருமான வரித் துறை அதிகாரிகள் கடந்த ஆண்டு நவம்பரில் ஹைதராபாத்தில் உள்ள 40 பிரியாணி ஓட்டல்களில் சோதனை நடத்தியபோது, வருவாயை மறைத்து ரூ.400 கோடி வரிஏய்ப்பு மோசடி நடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தெலங்கானா, ஆந்திரா, தமிழகம், குஜராத், ராஜஸ்தான் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் செயல்படும் பிரபல பிரியாணி ஓட்டல்களின் கட்டண ரசீது விவரங்களை வருமான வரித் துறை அதிகாரிகள் சோதனை செய்தனர். இதற்கு செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது.

சுமார் 1.77 லட்சம் பிரியாணி ஓட்டல்களில் கடந்த 2019 முதல் 2025 வரை எவ்வளவு பிரியாணி விற்பனை செய்யப்பட்டது என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. 60,000 ஜிபி அளவு கொண்ட கோப்புகள் ஏஐ தொழில்நுட்பத்தின் மூலம் விரைவாக ஆய்வு செய்யப்பட்டன.

அப்போது பிரியாணி தயாரிக்க தேவைப்படும் அரிசி, இறைச்சியின் அளவுக்கும், கணக்கில்காட்டப்பட்ட விற்பனைக்கும் மிகப்பெரிய வித்தியாசம் இருந்தது. மேலும் ஸ்விக்கி, சோமாட்டோ போன்ற ஆன்லைன் நிறுவனங்கள் மூலம் விற்பனையான பிரியாணி வகைகளின் எண்ணிக்கைக்கும், ஓட்டல்கள் தாக்கல் செய்த புள்ளிவிவரங்களுக்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி இருந்தது.

இதன்படி கடந்த 6 ஆண்டுகளில் சுமார் ரூ.70,000 கோடி அளவிலான பிரியாணி விற்பனையை ஓட்டல் நிர்வாகங்கள் மறைத்துள்ளன. இதுகுறித்து வருமான வரித் துறை வட்டாரங்கள் கூறியதாவது: பிரியாணி ஓட்டல்களில் ரொக்க பணப் பரிமாற்றம் கணினியில் பதிவேற்றம் செய்யப்படவில்லை. ரொக்க பணவணிகத்தை ஆய்வு செய்வது மிகவும் கடினம்.

இதன் மூலம் பெரிய அளவில் ஏரிஏய்ப்பு நடந்துள்ளது. மேலும், சாப்ட்வேர் மூலம் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்ட கட்டண ரசீதுகளில் சுமார் 30 நாட்கள் வரையிலான ரசீதுகளின் விவரங்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2019- 2025 காலகட்டத்தில் 1.77 லட்சம் ஓட்டல்களில் 2.43 லட்சம்கோடிக்கு பிரியாணி விற்பனை நடந்ததாக கணக்கு காட்டப்பட்டுள்ளது. ஆனால் ரொக்க விற்பனை, கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்ட ரசீதுகளை அழித்ததன் மூலம் ரூ.70,000 கோடி அளவிலான பிரியாணி விற்பனை மறைக்கப்பட்டுள்ளது.

முதல்கட்ட ஆய்வின்படி கர்நாடகஓட்டல்களில் ரூ.2,000 கோடி, தெலங்கானா ஓட்டல்களில் ரூ.1,500 கோடி, தமிழக ஓட்டல்களில் ரூ.1,200 கோடி வரிஏய்ப்பு கண்டறியப்பட்டுள்ளது. ஏஐ தொழில்நுட்பத்தின் உதவியால் மிக குறுகிய காலத்தில் 60,000 ஜிபி அளவு கோப்புகளை ஆய்வு செய்து வரிஏய்ப்பு மோசடியை கண்டுபிடித்து உள்ளோம்.

சம்பந்தப்பட்ட ஓட்டல் நிர்வாகங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இதேபோல நாடு முழுவதும் உள்ள பிரியாணி ஓட்டல்கள், இதர ஓட்டல்களில் கோடிக்கணக்கில் வரிஏய்ப்பு நடந்திருக்கக்கூடும் என்று சந்தேகிக்கிறோம். இதுதொடர்பாக ஏஐ உதவியுடன் விரைவில் சோதனை தொடங்கப்படும்.

## தேமுதிக திமுகவுடன் இணைந்ததை கிருஷ்ணகிரியில் தேமுதிகவினர் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்



கிருஷ்ணகிரி, பிப்.21-

தேமுதிக முதல் முறையாக இந்திய கூட்டணி கட்சியில் இணைந்ததையடுத்து தமிழகம் முழுவதும் தேமுதிக கட்சியினர் உற்சாகமாகக் கொண்டாடி வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தேமுதிக, மற்றும் நகர ஒன்றிய தேமுதிக சார்பில் கிருஷ்ணகிரி ரவுண்டான அருகில் பட்டாசு வெடித்தும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சின்னராஜ், தலைமையில் நடைப்பெற்ற இந்த கொண்டாட்ட நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி நகர தேமுதிக செயலாளர் ரவி, கிழக்கு ஒன்றிய தேமுதிக செயலாளர் வேட்டியம்பட்டி முருகன், மேற்கு ஒன்றிய செயலாளர் வஜ்ரவேல், வடக்கு ஒன்றிய செயலாளர் மாதேஷ், காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றிய செயலாளர் விஜய் வல்லரசு உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான தேமுதிகவினர் உற்சாகமாக கலந்துக் கொண்டனர்.



மதுரை அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் கோடை காலம் துவங்குவதை கருத்தில் கொண்டு பக்தர்கள் நடந்து செல்ல நிழற்கூடாரங்கள் தயாரிப்பு செய்து பிரபல தனியார் ஜவுளிக் கடை யின் சார்பில் அதன் நிறுவனத்தின் பொது மேலாளர் கோயில் நிர்வாகத்திடம் வழங்கினார்.

## ஆன்லைன் லாட்டரி விற்பனை குமரி எஸ்.பி.யிடம் புகார்

நாகர்கோவில்,பிப்.21–

குமரி மாவட்டத்தில் கேரள ஆன்லைன் லாட்டரிகள் விற்பனை பரவலாக நடந்து வருவதாக குமரி மாவட்ட எஸ்பி ஸ்டாலினுக்கு தொடர் புகார்கள் சென்றன.

இந்நிலையில் கோட்டாறு இருளப்பபுரம் பகுதியில் வாடகை வீட்டில் ஆன்லைன் லாட்டரி விற்பனை நடந்து வருவது குறித்து கோட்டார் போலீஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் அங்கு போலீசார் அதிரடியாக சோதனை மேற்கொண்டனர். அப்போது அங்கிருந்த 6 பேரை பிடித்து போலீஸார் விசாரித்தனர். அவர்கள் ஆன்லைனில் லாட்டரி விற்பனை செய்தது உறுதி செய்யப்பட்டது. அவர்களிடம் இருந்து 1 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் பணம், ஆன்லைன் லாட்டரி விற்பனைக்கு பயன்படுத்திய 13 செல்போன்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டனர். 6 பேரையும் போலீஸார் கைது செய்தனர். விசாரணையில் அவர்கள் மதுரை கல்லுக்குடியை சேர்ந்த தினேஷ்பாபு(39), நாங்குநேரியை சேர்ந்த வீரமணிகண்டன்(27), திருநெல்வேலியை சேர்ந்த துரை(18), இசக்கிதவசி(18), தூத்துக்குடியை சேர்ந்த மாடசாமி(30), நாங்குனேரியை சேர்ந்த அரவிந்த்(29) என தெரியவந்தது. நாகர்கோவிலில் வாடகைக்கு வீடு எடுத்து ஆன்லைன் லாட்டரி விற்பனை நடைபெற்றது போலீசார் வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இதுபோல் குமரியில் வேறு இடங்களில் விற்பனை நடைபெற்று வருகிறதா? என போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



மதுரை மாவட்டம், பாலமந்திரம் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் தலைமையில் திலீப்பாபு தனிநபர் பங்களிப்பின் கீழ் 1.3 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கட்டிப்பணிகள் மேற்கொள்ளும் வகையில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. முதன்மை கல்வி அலுவலர் தயாளன் உடன் உள்ளார்.

# பெரியகுளத்தில் கிராம உதவியாளர்கள் காலமுறை ஊதியம் கோரி வட்டாட்சியர் அலுவலகத்தில் காத்திருப்பு போராட்டம்!




தேனி, பிப்ரவரி. 20-

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டத்தில் தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் கிராம உதவியாளர்கள் மூன்று அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் வேலை நிறுத்தம் மற்றும் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது.

இந்த போராட்டம் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், பணியாளர்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்பட்டது. பெரியகுளம் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற இப்போராட்டத்திற்கு மாவட்ட செயலாளர் அழகர் தலைமை தாங்கினார்.

இதில் சின்னமுத்து, முருகன், ஜெயபிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். போராட்டத்தில் கலந்து கொண்ட பணியாளர்கள், பல ஆண்டுகளாக குறைந்த ஊதியத்தில் பணிபுரிந்து வருவதாகவும், காலமுறை ஊதியம் வழங்கப்படாததால் குடும்ப வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

மேலும், தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தினர். கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தொடர் போராட்டம் தொடரும் என்று தெரிவித்துள்ளனர்.



மதுரை மாவட்டம் தமிழ்நாடு வருவாய்துறை கிராம உதவியாளர் சங்கம் கடந்த 16 ஆம் நாளாக மறியல் மற்றும் வேலை நிறுத்த தொடர் காத்திருக்க போராட்டம் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சாக்ரடீஸ் மாவட்ட தலைவர் அவர்கள் தலைமையில் சிறப்புரை மாரியப்பன் மாநில துணைத் தலைவர் மற்றும் வளர்மதி மாநில துணை செயலாளர் உள்ளிட்டூர் சிறப்புரை நிகழ்த்தினார். இதில் அலுவலக உதவியாளருக்கு இணையாக கிராம உதவியாளர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூ.15700/- வழங்குவது உள்ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பதினாறாம் நாளாக தொடர் காத்திருக்க போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் கிராம உதவியாளர் சங்கத்தை சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டு அரசுக்கு எதிரான தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர்.



மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் உலகத் தாய்மொழி நாள் உறுதிமொழியினை துணை ஆணையாளர் சித்ரா தலைமையில் அனைத்து பணியாளர்களும் எடுத்துக் கொண்டனர் அருகில் உதவி ஆணையாளர் (கணக்கு) ம.முகமது அலி ஜின்னா, கணக்கு அலுவலர் பாலாஜி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பணியாளர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.




கிருஷ்ணகிரியில் தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் நடைப்பெற்ற கண்டன ஆர்பாட்டத்தில் அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு பால் இறக்குமதிக்கு அனுமதி அளித்த மத்திய அரசின் விவசாயிகள் விரோதப்போக்கை கண்டித்து நடத்தப்பட்ட கண்டன ஆர்பாட்டத்தில் அமெரிக்காவில் இருந்து இறக்குமதியாகும் பாலை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என வலியுறுத்தி கண்டன கோசங்களை எழுப்பினார்கள் .




மதுரை மாவட்டம், மதுரை கல்லூரியில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்-2026 முன்னிட்டு வாக்கு எண்ணும் மையம் அமைப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் மற்றும் மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர



ஏரல் சேர்மன் கோயில் தாமிரபரணி ஆற்றில் தேனி மாவட்டம், தேனியைச் சேர்ந்த சங்கர குமார் என்பவர் குடும்பத்துடன் குளித்த பொழுது சங்கரகுமாரின் மகள்கள் அபிநயா (வயது 16 ) மீனாட்சி (வயது 12) ஆகிய இரு பெண் குழந்தைகள் ஆற்றில் மூழ்கியதாகவும், மேற்படி இரு நபர்களின் உடலை ஏரல் தீயணைப்பு துறையினர் கைப்பற்றி 108 ஆம்புலன்ஸ் மூலம் ஏரல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் அவர்களை பரிசோதித்த மருத்துவர் இரண்டு குழந்தைகளும் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளார்கள். மேற்படி இறந்த குழந்தைகளின் உடல் பிரேத பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட உள்ளது. இச்சம்பவம் தொடர்பாக ஏரல் காவல்துறையினர் விசாரணை செய்து வருகின்றனர்.

## சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவில் தெப்பக்குளம் தடுப்பு சுவர் கட்டும் பணி துவங்கியது



சுசீந்திரம், பிப்.21-

தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற கோவில்களில் ஒன்றான சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோயில் அருகே வடக்கு பகுதியில் உள்ள தெப்பக்குளம் ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்தது இந்த தெப்பக்குளம் சுற்றுச்சுவர் திடீர் என வடக்கு பகுதியில் சரிந்து விழுந்தது இதனால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர் தகவல் அறிந்ததும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரடியாக வந்து பார்வையிட்டு மணல் மூடைகளை அடிக்கி தற்காலிக தடுப்பு சுவர் கட்டி இருந்தனர் இந்நிலையில் சுசிந்திரம் ஆசிரமத்தினை சேர்ந்த கார்த்தி கண்ணன் என்பவர் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார் அந்த வழக்கில் தெப்பத் திருவிழா வருவதால் உடனடியாக தெப்பக்குளத்தை சுற்றியுள்ள தடுப்புச் சுவரை கட்டி முடிக்க வேண்டும் என கோரி இருந்தார் அந்த வழக்கில் தெப்பத் திருவிழா வருவதால் உடனடியாக தெப்பக்குளத்தை சுற்றியுள்ள தடுப்புச் சுவரை கட்டி முடிக்க வேண்டும் என நீதி அரசர் உத்தரவு பிறப்பித்து வழக்கை முடித்து வைத்திருந்தார் இந்நிலையில் தடுப்புச் சுவரை கட்டுவதற்கு தனியார் கட்டுமான நிறுவனத்திடம் ஒரு கோடியே 43 லட்ச ரூபாய்க்கு டெண்டர் விடப்பட்டது அந்த டெண்டர் சென்னை ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டு சென்னை ஆணையர் உத்தரவு வழங்கினார் அதன்படி நேற்று தடுப்புச் சுவரை கட்டும் பணியை துவங்கினர் தெப்பத் திருவிழாவிற்கு இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கும் நிலையில் தெப்பக்குள தடுப்புச் சுவரை விரைந்து கட்டுவதற்கு அதிகாரிகள் பொதுமக்கள் கோரிக்கை வைத்ததின் பெயரில் பணியானது விரைவாக நடைபெற்று வருகிறது

## திருச்செந்தூருக்கு பாதயாத்திரை 14 கோயில் நிழ்வாகிகளுடன் குளச்சல் போலீஸாழ் ஆலோசனை




குளச்சல் பிப் 21-

குளச்சல் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள 14 கோயில்களில் இருந்து பக்தழ்கள் பலவிதமான காவடிகள் கட்டி பாதயாத்திரை செல்வழ். காவடி ஊர்வலம் நடைப் பெறுகிறது. இதுதொடழ்பாக, அந்தக் கோயில்களின் நிழ்வாகிகளுடன் குளச்சல் காவல் ஆய்வாளழ் ஆலோசனை நடத்தினாழ்.

அப்போது, போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் நடந்து கொள்ளவேண்டும். ஊழ்வலத்திற்கு கிரேன் பயன்படுத்தக் கூடாது. ஆழ்ச்- விளம்பர பேனழ் வைக்க அனுமதி இல்லை. ஒலிப்பெருக்கி அறிவிப்புகளை தவிழ்க்க வேண்டும்.

காவடி ஊழ்வலத்தில் ஒரு வாகனம் மட்டுமே அனுமதிக்கப்படும். வழியில் உள்ள பிறமத வழிபாட்டு தலங்கள் மற்றும் பிறமத உணழ்வுகளை புண்படுத்தும் விதமாக நடந்து கொள்ளாமல் செல்ல வேண்டும் ர்ன்பன போன்ற அறிவுரைகள் வழங்கப்பட்டன.

# திருச்சி காவேரி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் லியோ சங்க மாணவர்கள் சேவை வாரம் தொடக்க விழா




திருச்சி, பிப்ரவரி. 20-

திருச்சி காவேரி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் லியோ சங்க மாணவர்கள் சேவை வார தொடக்க விழாவை லியோ மாவட்ட தலைவர் லயன் ரஃபி தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இவ்விழாவில் லயன் விஜய் யோகானந்த லியோ ஒருங்கிணைப்பாளர், லயன் மோகனசுந்தரம், லயன் ராஜ்குமார், லியோ சங்கத்தின் தாய் சங்கமான திருச்சிராப்பள்ளி ராக் சிட்டி லயன்ஸ் சங்கத்தின் தலைவர் முருகன் மற்றும் செயலர், பொருளர், லியோ சங்கம் காவேரி கல்லூரித் தலைவர், செயலர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் காவேரி மகளிர் கல்லூரி லியோ சங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் சுதந்திர தேவி சேவை வர நிகழ்வை வழி நடத்துகிறார்.

* முதல் நாள் சேவை நிகழ்வாக ஏழை பெண்களுக்கு சேலைகள் வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பொது மருத்துவ பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது.

* இரண்டாம் நாள் நிகழ்வாக காட்டூரில் அமையப்பெற்ற நரம்பியல் பாதிக்கப்பட்ட மற்றும் மூளை வளர்ச்சி குறைந்த சிறப்பு குழந்தைகள் பள்ளியில் அவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்களும், உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டது.

# ராமேஸ்வரம், மண்டபத்தை சேர்ந்த 22 மீனவர்கள் 4 விசைப்படகுடன் இலங்கை கடற்படையிடம் கைது





இராமேஸ்வரம், பிப்.20-

ராமேஸ்வரம்மீனவர்கள் மன்னார் வடக்கு கடல் பகுதியிலும்மண்டபம்மீனவர்கள் காரைநகா ; கடற்கரை பகுதியில் மீன்பிடித்து கொண்டிருந்த போது எல்லை தாண ;டி மீன்பிடிப்பில் ஈடுப்பட்டதாக 4 விசைப்படகுடன் 22 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து மன்னார் நெடுந்தீவு துறைமுகத்திற்கு கொண்டு சென்றனர்.

ராமநாதபுரம்மாவட்டம் ராமேஸ்வரம்மற்றும்மண்டபம்மீன்பிடி துறைமுகங்களில ; இருந்து நேற்று 800க்கும்மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடி அனுமதி சீட்டு பெற்று மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். ராமேஸ்வரம்மற்றும் மண்டபம் மீனவர்கள் அந்தந்த துறைமுகங்களில் இருந்து மீன்பிடிக்க சென்ற 22 மீனவர்களை நான்கு விசைப்படகுடன் ஒரு நாள் இரவில் கைது செய்தனர் இலங்கை கடற்படையினர்.

இதில் விமல்ராஜ ; ரமேஷ் அந ;தோணி கிருமி ராஜ் வெங்கடேசன் ஆகியோரூக்கு சொந்தமான படகில் கடலில் மீன்பிடித்து கொண்டிருந்து போது வடக்கு மன்னார் கடல் பகுதியிலும் மண்டபம் மீனவர்கள் காரைநகர் பகுதியில் கொண்டிருந்த போது எல்லை தாண்டி மீன்பிடிப்பில் ஈடுப்பட்டதாக 4 விசைப்படகுடன் 22 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து மன்னார் மற்றும் நெடுந்தீவு துறைமுகத்திற்து கொண்டு சென்றனர். நெடுந்தீவு பகுதியில் இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு நெடுந்தீவு கடற்பரப்பில் வைக்கப்பட்ட 12 மீனவர்களை ஊர்காவல்துறை நீதிமன்றத்தில ஆஜர்ப்படுத்தி மார்ச் 4ம்தேதி காவல் நீடிப்பு செய்து அனைவரையும் யாழ்ப்பாணம்சிறையில் அடைத்தனர்.வடக்கு மன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 10 மீனவர்களை இலங்கை கடற்படையினர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி மார்ச் 5ம்தேதி வரை காவல் நீடிப்பு செய்து வவுனியா சிறையில் அடைத்தனர்.

மேலும் மீனவ குடும்பத்தினர் வயிற்று பிழைப்புக்காகவும்மருத்துவ செலவுக்காகவும் மீன்பிடிக்க சென்ற மீனவர்களின்உடல் நிலையை கருத்தில் கொண ;டு உடனடியாக விடுதலை செய்ய இரு நாட்டு அரசும்பேசி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்களின்உறவினர்கள் கண ;ணீருடன் கோரிக்கை வைத்தனர்.

# பர்கூர் சிப்காட் நிறுவனங்கள் இணைந்து மாவட்ட அளவிலான தடகள போட்டி 800 மாணவர்கள் பங்கேற்பு



ஊத்தங்கரை பிப்ரவரி 21-

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சிப்காட் பகுதியில் செயல்பட்டு வரும் செய்யார் டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் ஃபேர்வே எண்டர்பிரைசஸ் (யூனிட் 1 - 2) ஆகிய நிறுவனங்கள் இணைந்து 2026 ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான தடகள விளையாட்டுப் போட்டி ஊத்தங்கரை உள்விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடத்தினர். இதில் 45 பள்ளிகளில் இருந்து சுமார் 800 மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட இந்த போட்டிகள் காலை 8.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெற்றன. 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர், 800 மீட்டர் ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டுதல் (லாங் ஜம்ப்), ஷாட் புட் உள்ளிட்ட பல்வேறு தடகள போட்டிகள் நடைபெற்றன.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மெடல், சான்றிதழ் மற்றும் பிளாஸ்க் ஆகியவை பரிசாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ் குமார், மாவட்ட டி.எஸ்.ஓ நடராஜன், முருகன் மற்றும் மாவட்ட டி.ஐ.பி.இ. வளர்மதி ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினர். இந்த நிகழ்வில் நிறுவனத்தின் சார்பில் மூத்த தலைமை இயக்குநர் (நிர்வாகம்) மணிமாறன் அருணாச்சலம், நிர்வாக பொது மேலாளர் ஜெயராஜ் பாபு, பொது மேலாளர் அருள் மகாவிஷ்ணு மற்றும் வெளிநாட்டு தொடர்புகள் தலைவர் டேவிட் ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி பா.ஜ., வேட்பாளர் யார்.?

## முட்டி மோதும் தலைகள் - தட்டி தூக்க காத்திருக்கும் இளம் தலைமுறையினர்



கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட துணை தலைவர் வக்கீல் ஜெகநாதன் , முன்னாள் ஐ.டி.விங் மாவட்ட நிர்வாகி எஸ்.சுபாஷ் ஆகியோர் பெயர்கள் இளைஞர்கள் பட்டியல் இடம் பெற்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இவர்கள் இருவருமே பாரம்பரிய பா.ஜ.,குடும்பத்தை சேர்ந்தவர்கள்.வக்கீல் ஜெகநாதன் சிறந்த பேச்சாளர், மாவட்ட பொதுச்செயலாளர் ,மத்திய அரசு வழக்கறிஞர் , சட்டமன்றத் தொகுதி அளவில் பூத் கமிட்டி பொறுப்பாளர் ஆகிய பதவிகள் வகித்தவர்.கடந்த ஓராண்டுக்கு முன்பு நாகர்கோவில் பாஜக தலைமை அலுவலகத்தை காங்கிரஸ் கட்சியினர் முற்றுகையிட திரண்டபோது கையில் கம்புடன் காங்கிரஸ் கட்சியினரை ஆக்ரோஷமாக விரட்டியடித்ததில் வக்கீல் ஜெகநாதன் அரும்பாடுபட்டார்.

இச்சம்பவம் டெல்லி தலைமைக்கு அன்றே நேரடியாக சென்றது. அதன் அடிப்படையில் வக்கீல் ஜெகநாதனை களம் இறக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது .

அந்த வரிசையில் அடுத்தபடியாக தென்தாமரைக்குளம் பேரூராட்சி கவுன்சிலரும், முன்னாள் ஐ.டி.விங் நிர்வாகியுமான சி.எஸ்.சுபாஷ் ,திமுக குறித்து வீடியோ ஒன்றை தனது சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்த போது போலீஸாரால் கைது செய்யப்பட்டு 13 நாட்கள் ஜெயிலில் இருந்தார் .

சமூக வலைதளங்களில் திமுக ஆட்சியில் நிலவும் பிரச்சினைகள் குறித்த பதிவுகளை துணிச்சலுடன் பதிவு செய்பவர்.கட்சிக்காக 13 நாட்கள் ஜெயிலில் இருந்தவர் என்ற அடிப்படையில் இவர் பெயரும் டெல்லி தலைமையின் மூளைக்குள் உள்ளதாம்.

தமிழக பா.ஜ., முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலையின் நம்பிக்கை பெற்ற இவருக்கு குஜராத் மாநிலத்தை சேர்ந்த மத்திய அமைச்சர் ஒருவர் பக்கபலமாக உள்ளதாக கூறப்படுகிறது.

இவர்கள் இருவரில் ஒருவரை தேர்வு செய்து,வேட்பாளராக களம் இறக்கலாம் என்ற முடிவுடன் தலைமை இருந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

முக்கிய தலைவர்களுடன் புகைப்படம் எடுத்து தனக்கு அதிக செல்வாக்கு உள்ளது போல் மாய பிம்பத்தை ஏற்படுத்தி இந்த தேர்தலில் எப்படியாவது சீட்டு வாங்கி விடலாம் என கங்கணம் கட்டி சுற்றி வலம் வரும் தொண்டர்களுக்கு அறிமுகம் இல்லாத நபர்களுக்கு பாஜக தலைமை வாய்ப்பு வழங்குமா? இல்லை உண்மையாக பாஜகவுக்காக இறுதி மூச்சு வரை உழைத்துக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்குமா? என்ற எதிர்பார்ப்பில் பாஜாகவினர் .

நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் பா.ஜ.க சார்பில் முன்னாள் அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன் ,தற்போதைய எம்.எல்.ஏ.,எம்.ஆர்.காந்தி ,மாநில செயலாளர் மீனாதேவ் ,மாவட்ட துணை தலைவர் வக்கீல் ஜெகநாதன் ,முன்னாள் ஐ.டி.விங் மாவட்ட நிர்வாகி சுபாஷ் ஆகியோரில் ஒருவர் வேட்பாளராக களமிறங்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

வருகிற சட்டமன்ற தேர்தலில் அதிமுகவுடன் கைகோர்த்து தேர்தலை சந்திக்கிறது பா.ஜ.க., பாராளுமன்றத்தில் திமுக எம்.பி.,க்கள் கொடுக்கும் குடைச்சலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தமிழகத்திலிருந்து திமுக ஆட்சியை அகற்ற பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உள்துறை அமித்ஷா ஆகியோர் அதிதீவிரம் காட்டி வருக்கின்றனர் .

அதன் அடிப்படையில் அதிமுக கூட்டணியை வலுப்பெற வைத்ததில் முக்கிய பங்காற்றியது பாஜக என்பது வெளிப்படையாகவே தெரிந்த ஒன்று.

தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை மாதங்கள் உள்ள நிலையில்,தற்போதே பிரதமர் மோடி, மத்திய அமைச்சர் அமித்ஷா ஆகியோர் தமிழகம் வருகை அதிகரிக்க தொடங்கிவிட்டது.

அதிமுக தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்றுள்ள பா.ஜ., தேர்தலில் தங்களுக்கு 40 தொகுதிகள் ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளதாக பேசப்படுகிறது.

இதற்கு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியும் சம்மதம் தெரிவித்துள்ளார்.இதையடுத்து தேர்தல் பொறுப்பாளர்களையும் பா.ஜ., தலைமை அறிவித்துள்ளது.

பா.ஜ.,புது வியூகம்..!

பரபரப்பான அரசியல் சூழலில் பாஜக போட்டியிடும் 40 தொகுதிகளிலும் வேட்பாளர்கள் தேர்வு செய்யும் பணி தொடங்கிவிட்டது.கடந்த 20 ஆண்டு வரலாற்றில் எப்போதுமே பா.ஜ., சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் மூத்த நிர்வாகிகளாகவே இருந்து வருகின்றனர்.

ஆனால் இம்முறை இளைஞர்களுக்கு வாய்ப்பு அதிகளவில் வழங்க வேண்டும் என்ற முடிவினை பா.ஜ., தலைமை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

குறைந்தபட்சம் 10 தொகுதிகளில் இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற முடிவுடன் வேட்பாளர் தேர்வினை தொடங்கியுள்ளதாம் பா.ஜ.க.

கட்சி மீது விஷ்வாசம் இருக்க வேண்டும்.பாரம்பரிய பா.ஜ., குடும்பமாக இருக்க வேண்டும்.கட்சிக்காக ஏதாவது ஒரு வகையில் தியாகம் செய்திருக்க வேண்டும்.குறிப்பாக சுய விளம்பரங்களை மட்டும் முன்னெடுத்து செல்பவர்களாக இருக்க கூடாது என பல்வேறு தீர்க்கமான முடிவுகளை தேசிய தலைமை மாநில தலைமைக்கு அறிவுறுத்தியுள்ளது என கூறப்படுகிறது.

நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் ஏற்கனவே பா.ஜ.க வெற்றி பெற்றது.இத்தொகுதியில் முன்னாள் அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன் ,ஏற்கனவே தொகுதி எம்.எல்.ஏ.,வாக இருந்து வரும் எம்.ஆர். காந்தி மற்றும் மாநில செயலாளர் மீனா தேவ் என மூன்று தலைகள் வேட்பாளர் பட்டியலில் இருந்து வரும் நிலையில், இம்முறை நாகர்கோவில் தொகுதியில் இளைஞர் ஒருவரை களமிறக்க நடவடிக்கை எடுத்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.




# விளாத்திகுளத்தில் வனத்துறை சார்பில் சமையலறை தோட்டம் பயிற்சி

## 270 மாணவர்களுக்கு சான்றிதழ் 1000 மரக்கன்றுகள் வழங்கல்



விளாத்திகுளம் பிப். 21-

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் அக்லூட் சிறப்பு பள்ளியில் விளாத்திகுளம் வனச்சரக அலுவலகம் சார்பில் சமையலறை தோட்டம் (கிட்சன் கார்டன்) அமைப்பது குறித்த வழிகாட்டுதல் பயிற்சி நடைபெற்றது.

மாவட்ட வன அலுவலர் இளையராஜாவின் அறிவுறுத்தலின்படி, விளாத்திகுளம் வனச்சரக அலுவலர் கனிமொழி அரசு தலைமையில் இந்த பயிற்சி நடத்தப்பட்டது. இதில் விளாத்திகுளம் வனவர் பாண்டியராஜ், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் இந்திராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பயிற்சியின் போது மாணவ-மாணவிகளுக்கு சமையலறை தோட்டம் அமைப்பது, கத்திரிக்காய், அவரைக்காய், வெண்டைக்காய், தக்காளி உள்ளிட்ட காய்கறி விதைகளை நடவு செய்வது, அவற்றை பராமரித்து இயற்கை முறையில் உற்பத்தி செய்வது குறித்து செய்முறை விளக்கங்களுடன் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், ஆரோக்கியமான உணவு பழக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமை வளர்ப்பின் அவசியம் குறித்து மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பயிற்சியின் நிறைவில் 270 மாணவ-மாணவிகளுக்கு பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து அனைவருக்கும் பயன்படும் வகையில் 1000 மரக்கன்றுகள் வழங்கப்பட்டு, அவற்றை நட்டு பராமரிப்பது குறித்த ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சி பள்ளி மாணவர்களிடையே பசுமைச் சூழல் பாதுகாப்பு மற்றும் சுய உணவு உற்பத்தி குறித்த ஆர்வத்தை அதிகரித்துள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

# பிறப்பு சான்றிதழில் குழந்தையின் பெயர் பதிவு செய்ய கால அவகாசம் நீட்டிப்பு



தஞ்சாவூர் பிப்ரவரி 21-

பிறப்பு சான்றிதழில் குழந்தையின் பெயர் பதிவு செய்ய கால அவகாசம் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் கூறியுள்ளார்

இதுகுறித்துஅவர்வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

பிறப்பு பதிவு குழந்தையின் முதல் உரிமை. பிறப்பு சான்றிதழில் குழந்தையின் பெயரை பதிவு செய்தால் மட்டுமே அது முழுமை யான சான்றிதழ் ஆகும் .குழந்தை பிறந்த 21 நாட்களுக்குள் பதிவு செய்து இலவச பிறப்பு சான்றிதழ் பெற பிறப்பு இறப்பு பதிவு சட்டம் வழி வகை செய்கிறது குழந்தையை பள்ளியில் சேர, வாக்காளர் அடை யாள அட்டை, ஓட்டுநர் உரிமம் பெற, பாஸ்போர்ட், விசா உரிமம், அயல் நாட்டில் குடியுரிமை பெற இன்றியமையாத அவணமாக பிறப்பு சான்றிதழ் உள்ளது

ஒரு குழந்தையின் பிறப்பு, பெயரி ன்றி பதிவு செய்யப்பட்டிருப்பின் அக்குழந்தையின் பிறப்பு பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 12 மாத ங்களுக் குள் குழந்தையின் பெற்றோர் அல்லது காப்பாளர் எழுத்து வடிவிலான உறுதி மொழி யை சம்பந்தப்பட்ட பிறப்பு இறப்பு பதிவாளர் இடம் அளித்து எவ்வித கட்டணமும் இன்றி பெயர் பதிவு செய்திடலாம் 12 மாதங்களுக்குப் பின் 15 ஆண்டுகளுக்குள் ரூபாய் 200 தாமதக்கட்டணம் செலுத்தி குழந்தையின் பெயரினை பதிவு செய்திடலாம் .15 ஆண்டுகளுக்கு மேல் குழந்தையின் பதிவுசெய்ய இயலாது .இந்தியதலைமை பிறப்பு இறப்பு பதிவாளரின் அறிவுரைப்படி 1 - 1 - 2000 க்கு முன்னர் பதிவு செய்யப்பட்டுள்ள பிறப்புகளுக்கும், 1-1-2000 க்கு பிறகு 15 ஆண்டுகள் கடந்த பிறப்பு பதிவுகளுக்கும் குழந்தை பெயர் வைத்து பிறப்பு சான்றிதழ் பெற 26. 9.2026 வரை காலவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது பிறப்பு பதிவு செய்யப்பட்டுள்ள நகராட்சி,மாநகராட்சிஅல்லது சம்பந்தப்பட்ட தாசில்தார் பேரூராட்சி அலுவலரிடம் உரிய ஆதாரங்களுடன் (கல்வி சான்று, ஓட்டினர் உரிமை) விண்ணப்பிக் கலாம் .இவ்வாறான கால அவகாசம் நீட்டிப்பு இனிவரும் காலங்களில் வழங்கிட இயலாது என இந்திய தலைமை பிறப்பு இறப்பு பதிவாளர் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த அரிய வாய்ப்பினை பயன் படுத்தி கொண்டு பெயருடன் கூடிய பிறப்பு சான்றிதழ் பெற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

# திருவெண்ணெய்நல்லூர் அருகே தாய் தந்தை இழந்த அண்ணன், தங்கைக்கு நிவாரண உதவிகள் காவல் ஆய்வாளர் அழகிரி வழங்கினார்



திருவெண்ணெய்நல்லூர், பிப்.21-

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் அருகே சித்தலிங்கமடம் கிராமத்தை சேர்ந்த அஸ்வினி(17), பவானி(14). இவர்கள் இருவரும் தாய் தந்தையை இழந்து ஆதரவின்றி அந்த கிராமத்தில் தனிமையில் இருந்து வந்தனர். இச்சம்பவம் குறித்து இந்த இருவரின் புகைப்படங்கள் சமூக வலைகளில் வேகமாக பரவியது. இதனை அறிந்த திருவெண்ணெய்நல்லூர் காவல் ஆய்வாளர் அழகிரி ஏற்பாட்டில் அரிசி, மளிகை பொருட்கள், காய்கறிகள் மற்றும் காவல்துறை சார்பாக நிதி உதவி வழங்கப்பட்டது. அப்போது இவர்களின் படிப்பு செலவை முழுமையாக ஏற்றுக் கொள்வதாக திருவெண்ணெய்நல்லூர் காவல் ஆய்வாளர் அழகிரி தெரிவித்தார். இச்சம்பவம் மனிதநேயமிக்க காவல் ஆய்வாளர் என அழகிரிக்கு பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள் நேரிலும் தொலைபேசியிலும், சமூக வலைதளங்களில் பாராட்டி வருகின்றனர்.

# புதிய தார்சாலை அமைக்கும் பணி துவக்க விழா!



திருப்பூர், பிப்.21-

திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 3=ல் உள்ள 59 வது வாரத்தில் பெரியார் நகர் ராயல் சிட்டி கண்ணன் காட்டேஜ் ஆகிய பகுதிகளில் பல்வேறு பிரதான சாலை குறுக்கு சாலை ஆகிய சாலைகளுக்கு புதிய தார்சாலை அமைக்கும் பணி பூமி பூஜை விழாவினை மாமன்ற உறுப்பினர் பந்தல் சாமிநாதன் ஏற்பாடு செய்திருந்தார் இந்த நிகழ்ச்சியினை பகுதி செயலாளர் முத்தனம் பாளையம் குமார் துவக்கி வைத்தார் இந்த நிகழ்வில் 59 அ வட்ட கழக செயலாளர் வேலுசாமி. மாணிக்கம்முர்த்தி.ஆனந்தன்.சுரேஷ். அய்யப்பன்.குமரேசன்.கார்த்திக்.கிட்டு சாமி.ராக்கி.இளங்கோ. பொன்னி தெய்வாம் பாள்.மல்லிகா. பொன்னி பானுப்பிரியா ஃப்ரீயா பிரேமா ரங்கம்மா சாந்தி அழகி.பண்ணாரி. தங்கமணி சாந்தாமணி வள்ளி. ராஜேஸ்வரி. வள்ளி ராஜேஸ்வரி ருக்குமணி வள்ளி ஆத்தா உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் மாநகராட்சி அதிகாரிகளும் ஊர் பொதுமக்களும் பெரும் திரளாக பங்கேற்றனர்.

# வரதலம்பட்டில் 58 ஆம் ஆண்டு காளை விடும் திருவிழா



**வேலூர் பிப்,21–**

**வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம் வரதலம்பட்டு ஊராட்சியில் ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலய மயான கொள்ளையையொட்டி 58 ஆம் ஆண்டு**

**மாபெரும் காளை விடும் திருவிழா பிப் 20 வெள்ளியன்று நடைபெற்றது.**

**வேலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் திருப்பத்தூர் திருவண்ணாமலை மற்றும் சித்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து சுமார் 200க்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்றன. ஏராளமான இளைஞர்கள் காளை விடும் திருவிழாவை காணக் குவிந்திருந்தனர். குறைந்த நேரத்தில் குறிப்பிட்ட இலக்கினை கடக்கும் காளைகளுக்கு முதல் பரிசாக ஹீரோ ஸ்பிளண்டர், நான்காம் பரிசாக, இரண்டாம் பரிசாக ஹீரோ எச்எப் டீலக்ஸ், மூன்றாம் பரிசாக டிவிஎஸ் சூப்பர் எக்ஸ் எல் ஆகிய இருசக்கர வாகனங்கள் மற்றும் பரிசுத்தொகைகள் உள்ளிட்ட மொத்தம் 60 பரிசுகள் வழங்கப்பட்டன.**

**இப்போட்டியில் கலந்து கொண்ட அனைத்து காளைகளையும் கால்நடை மருத்துவர்கள் பரிசோதனை செய்த பிறகு அனுமதிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் காளை விடும் குழு நிர்வாகிகள் மேட்டுக்குடி சக்கரவர்த்தி, கணாச்சாரி பரசுராமன் ஒன்றிய கவுன்சிலர் எஸ்பிஎம்.குமார் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் அன்னலட்சுமி ராமு மற்றும் இளைஞர் அணியினர் கலைநிலா காதலர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.**

# புதிய தார்சாலை அமைக்கும் பணி துவக்க விழா!



**திருப்பூர், பிப்.21–**

**திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 3=ல் உள்ள 59 வது வாரத்தில் பெரியார் நகர் ராயல் சிட்டி கண்ணன் காட்டேஜ் ஆகிய பகுதிகளில் பல்வேறு பிரதான சாலை குறுக்கு சாலை ஆகிய சாலைகளுக்கு புதிய தார்சாலை அமைக்கும் பணி பூமி பூஜை விழாவினை மாமன்ற உறுப்பினர் பந்தல் சாமிநாதன் ஏற்பாடு செய்திருந்தார் இந்த நிகழ்ச்சியினை பகுதி செயலாளர் முத்தனம் பாளையம் குமார் துவக்கி வைத்தார் இந்த நிகழ்வில் 59வது வட்ட கழக செயலாளர் வேலுசாமி.மாணிக்கம்முர்த்தி. ஆனந்தன்.சுரேஷ்.அய்யப்பன்.குமரேசன்.கார்த்திக்.கிட்டு சாமி.ராக்கி.இளங்கோ. பொன்னி தெய்வாம் பாள்.மல்லிகா. பொன்னி பானுப்பிரியா ஃப்ரீயா பிரேமா ரங்கம்மா சாந்தி அழகி.பண்ணாரி. தங்கமணி சாந்தாமணி வள்ளி. ராஜேஸ்வரி. வள்ளி ராஜேஸ்வரி ருக்குமணி வள்ளி ஆத்தா உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் மாநகராட்சி அதிகாரிகளும் ஊர் பொதுமக்களும் பெரும் திரளாக பங்கேற்றனர்.**

# தருமபுரி சனத்குமார் நதியின் கால்வாய் புனரமைப்பு பணி துவக்கம்



தருமபுரி, பிப்ரவரி. 21-

தருமபுரி மாவட்டத்தில் தென்பெண்ணை துணை நதிகளில் முக்கியமான நதி சனத்குமார் நதி இந்த நதியின் கால்வாய்க்கு வத்தல்மலை

அடிவாரம் மற்றும் பதிகால்பள்ளம் வனப்பகுதி நீர் பிடிப்பு பகுதியாக இருந்தது. மலைப்பகுதி அடிவாரத்தில் இருந்து ஓடிவரும் நீர் பெரிய ஏரி, அதியமான் கோட்டை ஏரி, மாதேமங்கலம் ஏரி, ஏமக்குட்டியூர் வழியாக இலக்கியம்பட்டி ஏரிக்கு வருகிறது . தருமபுரி நகரம் அன்னசாகரம் வழியாக கம்பைநல்லூர் சென்று இருமத்தூர் தென்பண்ணை ஆற்றில் கலக்கிறது. இந்த நதியின் கால்வாய்கள் முறையாக பொதுப்பணித்துறையினர் பராமரிப்பு செய்யவில்லை. இதனால் ஆக்கிரமிப்பு மற்றும் சாக்கடை கழிவுநீர் ஓடும் பகுதியாக இப்பொழுது இந்த கால்வாய் காட்சியளிக்கிறது. இந்த நிலையில் சனத்குமார் நதியின் கால்வாய் பகுதியை அகலப்படுத்தி தூர்வார வேண்டும் இதற்காக சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்திருந்தனர்.

அந்த கோரிக்கையை ஏற்று ரூ. 62 கோடிக்கு திட்டம் மதிப்பீடு தயாரித்து அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது . இந்த நிலையில் தருமபுரி மாவட்ட நிர்வாகம், எக்ஸ்னோரா மற்றும் ஆதி பவுண்டேஷன் இணைந்து சனத்குமார் நதி புனரமைப்பு பணி துவக்க விழா அன்னசாகரம் பிரிவு சாலையில் தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குனர் ரூபன் சங்கர் ராஜ், தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி ஆகியோர் பணியை துவக்கி வைத்தனர். இதில் தன்னார்வலர் ஆதிமூலம், மருத்துவர் அசோகன் மற்றும் நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# தேமுதிகவுக்கு புத்துயிர் கொடுத்துள்ளார் பிரேமலதா

## திமுகவுடன் தேமுதிக கூட்டணி குறித்து முத்துக்குமார் கருத்து





நாகர்கோவில் பிப்ரவரி 21-

திமுகவுடன் தேமுதிக கூட்டணி அமைத்து கொண்டது, பிரேமலதாவின் அரசியல் ஆளுமைக்கு கிடைத்த வெற்றி எனவும், இதனால் தேமுதிக புத்துயிர் பெற்றுள்ளதாகவும் அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனர் முத்துக்குமார் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:

யாரும் எதிர்பாராத நேரத்தில், சரியான தருணத்தில் திமுகவுடன் தேமுதிக கூட்டணி அமைத்து கொண்டுள்ளது. பிரேமலதா எடுத்த சரியான முடிவாக தான் தெரிகிறது.

தேமுதிக தொடங்கப்பட்டு 20 ஆண்டுகள் கடந்து விட்டன. அசுர பலத்தில் இருந்த தேமுதிக 2006 தேர்தலில் தனித்தே களம் கண்டது. அந்த தேர்தலில் விஜயகாந்த் மட்டுமே வெற்றி பெற்றிருந்தாலும் கூட , அனைத்து வேட்பாளர்களும் 10% விருந்து,20% வரையிலும் வாக்குகளை பெற்றிருந்தார்கள். அதன் பிறகு அதிமுகவுடன் கூட்டணி அமைத்து 41 தொகுதிகளில் போட்டியிட்டு 29 தொகுதிகளில் தேமுதிக வென்றது. அப்போது விஜயகாந்த் எதிர்கட்சி தலைவருமானார்.

அதன்பிறகு திமுகவுக்கு எதிராகவே களத்தில் இறங்கி தேர்தலை சந்தித்த தேமுதிக தொடர்ந்து படுதோல்விகளை தான் தழுவியது. அப்போது பிரேமலதாவின் அரசியல் வியூகம் சரியில்லை என்றே தோன்றியது.

ஆனால் இந்த முறை அதிக தொகுதிகள் யார் தருவார்கள் என்பதை எதிர் பார்க்காமல், எத்தனை சட்டமன்ற உறுப்பினர்களை உருவாக்க முடியும் என்கிற கணிப்பில் திமுகவுடன் தேமுதிக கை கோர்த்து இருப்பது சரியானதாகவே தெரிகிறது. இதன் மூலம் பிரேமலதாவின் அரசியல் ஆளுமை நிருபிக்கப் பட்டுள்ளது. தேமுதிக புத்துயிர் பெற்றுள்ளது. கிடைக்கிற தொகுதிகள் குறைவாக இருந்தாலும், பிரேமலதா உட்பட அவரது குடும்பத்தில் 3 பேர் ராஜ்யசபா உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினராவதற்கு உரிய தகுதி உருவாகியுள்ளது.

மண்டபத்தை இடிந்து விஜயகாந்துக்கு கொடுமைகளை விளைவித்த திமுக வுடன் தேமுதிக கூட்டணி வைத்திருக்க கூடாது என்று பலரும் சொல்லி வந்தாலும், அவர்களுக்கு விடை கொடுக்கிற வகையில், விஜயகாந்த் அவர்கள் 2016 தேர்தலிலேயே திமுகவுடன் கூட்டணி வைக்க நினைத்தார். அது அப்போது நிறைவேறாமல் போனது. இப்போது நிறைவேறியுள்ளது என்று கூறி பிரேமலதா எதிரிகளின் வாய்களை மூடி யுள்ளார்.

2016 தேர்தலில் மக்கள் நலக்கூட்டணி என்று விஜயகாந்த் தலைமையில் அமைத்துக் கொண்டு போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, மதிமுக போன்ற கட்சிகள் திமுகவில் முன்கூட்டியே ஓடோடி சென்று ஒட்டிக் கொண்ட நிலையில், தேமுதிக மட்டும் நாள் கடந்து, ஆண்டுகள் பல கடந்த பின்னரே திமுகவுடன் கூட்டணி அமைத்து கொண்டுள்ளது. இது காலம் கடந்த செயல் என்றாலும், பிரேமலதாவின் அரசியல் அனுபவத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவாக தான் தெரிகிறது . இதனால் வருகிற தேர்தலுக்கு பிறகு தேமுதிகவின் செல்வாக்கு மேலும் அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. இவ்வாறு முத்துக்குமார் கூறியுள்ளார்.

# கொங்கு இயற்கை யோகா மருத்துவ கல்லூரியில் வெள்ளை அங்கி வழங்கும் விழா



ஈரோடு, பிப். 21-

ஈரோட்டை அடுத்த பெருந்துறையில் உள்ள கொங்கு இயற்கை மற்றும் யோகா மருத்துவக் கல்லூரியின் 6 வது ஆண்டு வெள்ளை அங்கி வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவில் கல்லூரி முதல்வர் டாக்டர் பிரதாப் சிங் வரவேற்றார். கொங்கு வேளாளர் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி டிரஸ்டின் துணைத் தலைவர் வெங்கடாசலம் தலைமை தாங்கி வாழ்த்தி பேசினார் .

கல்லூரி தாளாளர் கார்த்திகேயன் உரையில் கல்லூரியில் அமைந்துள்ள பல்வேறு நவீன உபகரணங்கள் மற்றும் வசதிகளை பயன்படுத்தி மாணவர்கள் தங்களது அறிவு மற்றும் திறமைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்

நல்ல மருத்துவராக உருவாக மனிதநேயம் மிகவும் அவசியமான பண்பாகும் என்று கூறினார். அறக்கட்டளையின் முன்னாள் நிறுவனர் பி.சி. பழனிசாமி கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களை பாராட்டி உரையாற்றினார். அறக்கட்டளையின் உறுப்பினர் டாக்டர் நம்பி கொங்கு யோகா மற்றும் இயற்கை மருத்துவமனையின் பல்வேறு சிறப்பு அம்சங்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட புதுச்சேரி ஸ்ரீ பாலாஜி வித்யாபீத், யோகா தெரபி பள்ளி முதல்வர் பேராசிரியர் டாக்டர் மீனா ராமநாதன் புதிய மாணவர்களுக்கு வெள்ளை அங்கி அணிவித்து வாழ்த்துரை வழங்கினார். தனது உரையில், யோகா மற்றும் இயற்கை மருத்துவத்தின் முக்கியத்துவத்தையும், மருத்துவத் துறையில் ஒழுக்க நெறிகளை கடைப்பிடித்து தன்னலமில்லா சேவை செய்ய வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார்.

கொங்கு வேளாளர் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி டிரஸ்டின் தலைவர் தேவராஜன், செயலாளர் சத்தியமூர்த்தி, பொருளாளர் கார்த்திகேயன் ஆகியோர் மாணவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

தொடர்ந்து துணை முதல்வர் டாக்டர் ராஜரத்தினம் தலைமையில் அனைத்து மருத்துவர்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள் மருத்துவ உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர் முடிவில் மருத்துவர் ரூபிகா நன்றி கூறினார்.

# கிருஷ்ணகிரியில் நெல் சாகுபடியில் மீத்தேன் குறைப்பு பயிற்சி!



கிருஷ்ணகிரி, பிப்.21-

தமிழ்நாட்டில் நெல் சாகுபடியில் மீத்தேன் வாயு வெளியீட்டை குறைக்கும் தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி, கிருஷ்ணகிரி மாவட்ட இணை வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் 50 வேளாண் விரிவாக்க அலுவலர்கள் கலந்து கொண்டனர். இந்த பயிற்சியை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் அமைந்துள்ள சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து நடத்தின. நிகழ்ச்சிக்கு ஆராய்ச்சி இணைவர் டாக்டர் ச. பவீஷ் வரவேற்புரையாற்றினார். இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.காளிமுத்து தலைமை வகித்து, நெல் சாகுபடியில் மீத்தேன் குறைப்பது காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த உதவும் என தெரிவித்தார். துணை இயக்குநர்கள் திருமதி. கலா (நிளிமி), திருமதி. ஏஞ்சலின் பொன்ராணி (ஞிஞி-றிகி-கிரீகூஷீவீ) ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றினர். இணைப் பேராசிரியர் டாக்டர் சா. செந்தில்நாதன் திட்டத்தின் செயல்பாடு மற்றும் இதுவரை எட்டியுள்ள சாதனைகள் குறித்து விளக்கினார். தொடர்ந்து நடைபெற்ற அமர்வுகளில் நேரடி நெல் விதைப்பு (ஞிஷிஸி), காய்ச்சல்ரூ பாய்ச்சல் முறையிலான நீர் மேலாண்மை (கிகீஞி), மண் பரிசோதனை அடிப்படையிலான உர மேலாண்மை (ஷிஜிசிஸி), இளஞ்சிவப்பு நிறமி ஃபேகல்டேட்டிவ் மெத்திலோட்ரோபிக் பாக்டீரியா (றிறிதிவி) பயன்பாடு மற்றும் அன்றாட வாழ்வில் கார்பன் குறைப்பு நடைமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. ஊத்தங்கரை வட்டம் நரிகாணூர் கிராமத்தைச் சேர்ந்த மாதிரி விவசாயி திரு. ஆறுமுகம், பரிந்துரைக்கப்பட்ட தொழில்நுட்பங்களை பின்பற்றிய அனுபவங்களை பகிர்ந்துகொண்டார். பின்னர் நடைபெற்ற கேள்விரூ பதில் அமர்வில் வயல்வெளிகளில் ஏற்படும் சவால்கள் மற்றும் தொழில்நுட்பங்களை விரிவுபடுத்தும் வழிமுறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. திரு. தி. முகுந்தன் கார்பன் குறைப்பு தொடர்பான விழிப்புணர்வு அமர்வை நடத்தினார். நிகழ்ச்சி முடிவில் திருமதி ஞா. சபிதா நன்றியுரை வழங்கினார்.

# அங்கீகார தேர்தலை நடத்த கோரி நுகர்பொருள் வாணிப கழக சுமை தூக்குபவர்கள் முற்றுகைப் போராட்டம்



திருவண்ணாமலை பிப்.21-

சங்கத்தின் அங்கீகார தேர்தலை நடத்தக் கோரி திருவண்ணாமலையில் நுகர்பொருள் வாணிபக் கழக சுமை தூக்குபவர்கள் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவண்ணாமலை வேங்கிக்காலில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலகம் முன்பு நேற்று காலை இந்த முற்றுகை போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்திற்கு நுகர்பொருள் வாணிபக் கழக சுமை தூக்குவோர் மாநில பாதுகாப்பு சங்கத்தின் மாவட்டத் தலைவர் எம். தேவேந்திரன் தலைமை தாங்கினார். சங்க உறுப்பினர்கள் நூற்றுக்கணக்கில் இந்த முற்றுகை போராட்டத்தில் பங்கேற்றனர்.

சுமை தூக்குபவர்களுக்கு காலம் தாழ்த்தாமல் பச்சை அட்டையை வழங்கிட வேண்டும், வருகை பதிவேட்டில் சுமை தூக்கும் தொழிலாளர்களின் பெயர்களை பதிவிட வேண்டும், சங்க அங்கீகார தேர்தலை உடனடியாக நடத்திட வேண்டும், தொழிலாளர்களை வஞ்சிக்கும் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், தொழிலாளர்களை பழிவாங்கும் தர ஆய்வு மேலாளர் அன்புராஜை திருச்சியில் இருந்து வெளியேற்ற வேண்டும், தொழிலாளர்களுக்கான கோப்புகளை கிடப்பில் போடுவதை கைவிட வேண்டும் உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து அந்தந்த கிடங்குகளில் உள்ளிருப்பு போராட்டம் நடத்தப் போவதாக நுகர்பொருள் வாணிபக் கழக சுமை தூக்குவோர் மாநில பாதுகாப்பு சங்கம் அறிவித்துள்ளது.

# தூத்துக்குடி எல்லையில் அதிரடி போலீஸ் சோதனை



தூத்துக்குடி, பிப்.21-

2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மற்ற மாவட்டங்களின் எல்லை சோதனை சாவடியில் நடைபெற்று வரும் காவல்துறையினரின் தீவிர சோதனை மற்றும் கண்காணிப்பு பணியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் சி. மதன் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் சி. மதன் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து சோதனைச் சாவடிகளிலும் தீவிர சோதனை மற்றும் கண்காணிப்பில் ஈடுபட அனைத்து உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டார்.

அனைத்து உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர்கள் மேற்பார்வையில் காவல்துறையினர் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மற்ற மாவட்ட எல்லை சோதனை சாவடிகளில் குற்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு 24 மணிநேரமும் சுழற்சி முறையில் தீவிர வாகன சோதனை மற்றும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு, வாகனங்களின் விபரங்களை பதிவேட்டில் பராமரித்தும் மேலும் சோதனை சாவடியில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்களின் மூலம் மாவட்டத்தின் உள்ளே மற்றும் வெளியே செல்லும் அனைத்து வாகனங்களயும் ஆய்வு செய்தும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

செய்துங்கநல்லூர் சோதனை சாவடியில் நடைபெற்று வரும் காவல்துறையினரின் கண்காணிப்பு பணியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் சி. மதன் நேரில் சென்று திடீர் ஆய்வு செய்து போலீசாருக்கு அறிவுரை வழங்கினார்.

ஆய்வின் போது ஸ்ரீவைகுண்டம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் நிரேஷ், செய்துங்கநல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் ஜுன்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.





**கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், கதவணி ஊராட்சியில், பாம்பாறு மற்றும் கொரட்டி ஆறு பகுதிகளில், ஊரக வளர்ச்சித்துறை சார்பாக ரூ.15 கோடியே 31 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் உயர் மட்ட மேம்பால பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .கவிதா, ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் . மோகனசுந்தரம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.**

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# 10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு குறித்த கலந்தாய்வு - கலெக்டர் பங்கேற்பு !



**நாகர்கோவில், பிப்.21–**

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் கூட்டரங்கில் 10ம் 12–ம் வகுப்புகளின் பொதுத்தேர்வு குறித்து ஒருங்கிணைப்பு குழுவினருடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா கலந்தாய்வு மேற்கொண்டு கூறியதாவது:– தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை மார்ச் –2026 அரசுப் பொதுத்தேர்வுகள் 12ம் வகுப்பிற்கு 02.03.2026 முதல் 26.03.2026 வரையிலும் 10ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் 13.03.2026 முதல் 06.04.2026 வரையிலும் மற்றும் 11ம் வகுப்பில் தேர்ச்சி பெறாத பாடங்களுக்கு 03.03.2026 முதல் 27.03.2026 வரை நடைபெறவுள்ளது.**

**கன்னியாகுமரி மாவட்டத்தில் 12ம் வகுப்பிற்கான பொதுத்தேர்வுகள் மார்த்தாண்டம் கல்வி மாவட்டத்தில் 50 தேர்வு மையங்களிலும், நாகர்கோவில் கல்வி மாவட்டத்தில் 38 தேர்வு மையங்களிலும் நடைபெறவுள்ளது. மார்த்தாண்டம் கல்வி மாவட்டத்தில் 5736 மாணவர்களும் 5487 மாணவிகளும் மொத்தம் 11,220 மாணவ மாணவியர்கள் தேர்வு எழுத உள்ளனர். நாகர்கோவில் கல்வி மாவட்டத்தில் 5761 மாணவர்களும் 5052 மாணவியர்களும் மொத்தம் 22,033 மாணவ மாணவியர்கள் தேர்வு எழுத உள்ளனர். மார்த்தாண்டம் கல்வி மாவட்டத்தில் திருத்துவபுரம், புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி, நாகர்கோவில் கல்வி மாவட்டத்தில் நாகர்கோவில், புனித ஜோசப் கான்வென்ட் மேல்நிலைப்பள்ளி ஆகியவை 12ம் வகுப்பிற்கான விடைத்தாள் திருத்தும் மையங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. 12ம் வகுப்பிற்கான வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களாக மார்த்தாண்டம், அரசு (ஆ) மேல்நிலைப்பள்ளி மற்றும் முதன்மைக் கல்வி அலுவலக வளாகம் செயல்படும். மேற்கண்ட வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களிலிருந்து 22 வழித்தடங்கள் மூலம் சம்பந்தப்பட்ட மையங்களுக்கு வினாத்தாள்கள் எடுத்துச்செல்லப்படும். 11ம் வகுப்பிற்கான தேர்ச்சி பெறாத பாடங்களுக்கு 03.03.2026 முதல் 27.03.2026 வரை நடைபெறவுள்ளது.**

**கன்னியாகுமரி மாவட்டத்தில் 10ம் வகுப்பிற்கான பொதுத்தேர்வுகள் மார்த்தாண்டம் கல்வி மாவட்டத்தில் 67 தேர்வு மையங்களிலும், நாகர்கோவில் கல்வி மாவட்டத்தில் 50 தேர்வு மையங்களிலும் பொதுத்தேர்வுகள் நடைபெறவுள்ளது. மார்த்தாண்டம் கல்வி மாவட்டத்தில் 5380 மாணவர்களும் 5438 மாணவிகளும் மொத்தம் 10818 மாணவ மாணவியர்கள் தேர்வு எழுத உள்ளனர். நாகர்கோவில் கல்வி மாவட்டத்தில் 5267 மாணவர்களும் 5381 மாணவியர்களும் மொத்தம் 10648 மாணவ மாணவியர்கள் தேர்வு எழுத உள்ளனர். மார்த்தாண்டம் கல்வி மாவட்டத்தில் கருங்கல், பெத்லெகேம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில் கல்வி மாவட்டத்தில் நாகர்கோவில், கார்மல் மேல்நிலைப்பள்ளி ஆகியவை விடைத்தாள் திருத்தும் மையங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. 10ம் வகுப்பிற்கான வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களாக மார்த்தாண்டம், அரசு (பெ) மேல்நிலைப்பள்ளி மற்றும் முதன்மைக் கல்வி அலுவலக வளாகம் செயல்படும். மேற்கண்ட வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களிலிருந்து 25 வழித்தடங்கள் மூலம் சம்பந்தப்பட்ட மையங்களுக்கு வினாத்தாள்கள் எடுத்துச்செல்லப்படும். இத்தேர்வுகள் எவ்வித புகாருமின்றி சிறப்பாக நடைபெற அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு கூறினார். இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கியராஜ், காவல்துறை, மின்சாரவாரியம், போக்குவரத்து, சுகாதாரம், நாகர்கோவில் மாநகராட்சி சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

# ஊத்தங்கரையில் பல்வேறு கட்சியில் இருந்து விலகி உழைப்பாளி மக்கள் ஜனநாயக கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டனர் !



**ஊத்தங்கரை, பிப்.21–**

**கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் உள்ள உழைப்பாளி மக்கள் ஜனநாயக கட்சி அலுவலகத்தில் அதன் நிறுவனத் தலைவர் எஸ் சுதாகர் முன்னிலையில் மாற்றுக் கட்சியில் இருந்து விலகி உழைப்பாளி மக்கள் ஜனநாயக கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டனர், இந்நிகழ்ச்சியில் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு கட்சியில் இருந்து விலகி பி, ராஜேந்திரன் ,எல் பெருமாள், டி,தீபிகா ஆகியோர் உழைப்பாளர் மக்கள் ஜனநாயக கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டனர், கட்சியில் இணைந்த புதியவர்களுக்கு கட்சி நிறுவனத் தலைவர் எஸ் சுதாகர் சால்வை ,மாலைகள் அணிவித்து வரவேற்றார்,இந்த நிகழ்ச்சியில் கட்சியின் மாநிலத் துணை பொது செயலாளர் வெங்கடேசன், மாநில நிர்வாக குழு ஒருங்கிணைப்பாளர் சந்திரசேகர், மாநில இளைஞரணி தலைவர் எஸ் பிரபு, மாநில கொள்கை பரப்பு செயலாளர் கே ரமேஷ், மாநில மாணவர் அணி துணைத் தலைவர் சிவக்குமார், மாநில இளைஞர் அணி துணைத் தலைவர் டி,மாதேஷ், மாநில அமைப்பு செயலாளர் முருகவேல், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட துணை செயலாளர் மன்மத ராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்,**

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.